ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2486/07 - 2026 අප්‍රේල් මස 27 වැනි සඳුදා - 2026.04.27**

2486/07 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சங்கங்கள் கட்டளைச் சட்டம்**

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) பிரிவு 3 மற்றும் 4 இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்ஹ ஆகிய நான் இந்த அறிவித்தல் மூலம்

(1) இல. 205/3 ஏ, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06, என்ற முகவரியில் கழம்போ ஸ்கூல் ஒப் பிலோசொபி என்ற பெயரைக் கொண்ட சங்கத்தினை கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 3 (ஆ) ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்ய அதிகாரமளிக்கின்றேன்.

I. கல்வி மற்றும் சான்றுப்படுத்தல் கருத்தரங்குகள், தகைமை பாடநெறிகள், செயலமர்வுகள் மற்றும் ஏனையவற்றை ஒழுங்கு செய்தல்.

II. சமூக ஊடகங்கள் மற்றும் பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்தி, தத்துவம் போன்ற ஒரு பாடத்தில் பொதுவான சமூக ஆர்வத்தை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.

III. சிங்கள மொழியில் தத்துவம் தொடர்பான இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தல்.

IV. தத்துவத்தில் அதிகரித்து வரும் ஆர்வத்தின் மூலம் பகுத்தறிவு சிந்தனை கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்கு பங்களிக்க.

V. சமூக மோதலைக் குறைத்து சமூக ஒற்றுமையை அதிகரிக்கும் ஒரு நடைமுறையாக தத்துவத்தை நடைமுறைப்படுத்தல்.

VI. விஞ்ஞானரீதியான நுண்ணறிவை மேம்படுத்துவதற்கு பங்களிக்கக்கூடிய ஒரு கருவியாக தத்துவத்தைப் பயன்படுத்துதல்.

1A - G46711 - 04 (2026/04)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

VII. சினிமா, கட்புலக் கலைகள் மற்றும் நாடகம் உட்பட கலை பொதுவாக என்ன செய்கிறது என்பதன் மதிப்பை ஆதரிப்பதற்கு தத்துவத்தை ஒரு அடிப்படையாகப் பயன்படுத்துதல்.

(2) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து மேற்குறித்த சங்கத்திற்கு விடுவிப்பளித்து அக்கட்டளைச் சட்டத்தின் பிரயோகத்தை வரையறுக்கிறேன்.

**வசந்த சமரசிங்ஹ,**
வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும்,
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.

வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு,
இல. 492, எல்.எச்.பி கட்டிடம்,
ஆர் ஏ டி மெல் மாவத்தை,
கொழும்பு 03,
2026 ஏப்பிறல் 07.

ECG 04- 0207/1

**சங்கங்கள் கட்டளைச் சட்டம்**

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) பிரிவு 3 மற்றும் 4 இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்ஹ ஆகிய நான் இந்த அறிவித்தல் மூலம்

(1) அறை இல, 123, இல 93 தாதியர் விடுதி, ரிஜன்ட் வீதி, கொழும்பு 10, என்ற முகவரியில் த ஸ்ரீ லங்கா நர்சஸ் எஸோஸியேசன் என்ற பெயரைக் கொண்ட சங்கத்தினை கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 3 (ஆ) ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்ய அதிகாரமளிக்கின்றேன்.

i. இலங்கை மக்களின் சுகாதாரத் தேவைகளுக்கேற்ப தாதியர் சேவையை அபிவிருத்தி செயதல்

ii. பொதுமக்களிடையே தாதியர் சேவை பற்றிய விம்பத்தை மேம்படுத்துதல்.

iii. தாதி உத்தியோகத்தர்களிடையே தொழில்சார் கல்வியை விருத்தி செய்தல்

iv. தாதி உத்தியோகத்தர்களிடையே உயர்தரமான ஒழுக்க நெறியினை வளர்த்தெடுத்தல்

v. இலங்கை தாதியர் சேவை மற்றும் சர்வதேச தாதியர் சேவைகளுடனான உறவுகளை மேம்படுத்துதல்

vi. தாதியர் சேவைகள் மற்றும் தாதியர் கல்வி என்பவற்றுக்கான நியமங்களை அமைத்தல்

vii. தாதி உத்தியோகத்தர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

viii. தாதி உத்தியோகத்தர்களின் அந்தஸ்து மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல்

(2) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து மேற்குறித்த சங்கத்திற்கு விடுவிப்பளித்து அக்கட்டளைச் சட்டத்தின் பிரயோகத்தை வரையறுக்கிறேன்.

**வசந்த சமரசிங்ஹ,**
வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும்,
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.

வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு,
இல. 492, எல்.எச்.பி கட்டிடம்,
ஆர் ஏ டி மெல் மாவத்தை,
கொழும்பு 03,
2026 ஏப்பிறல் 07.

EOG 04- 0207/2

## சங்கங்கள் கட்டளைச் சட்டம்

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) பிரிவு 3 மற்றும் 4 இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்ஹ ஆகிய நான் இந்த அறிவித்தல் மூலம்

1. இல. 05 பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க என்ற முகவரியில் அமைந்துள்ள ஶ்ரீலங்க ப்ரமிதிகத ஜல போத்தல் சங்கமய என்ற பெயரைக் கொண்ட சங்கத்தினை கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3 (ஆ) கீழ் பதிவுசெய்ய அடுகாரமளிக்கின்றேன்.

    i. போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்திக் தொழில்துறையுடன் தொடர்புடைய சகல உறுப்பினர்களினதும் தொடர்ச்சியான இருப்பிற்காகவும் சுபீட்சத்திற்காகவும் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காகவும் செயற்படுவதற்கான கூட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதனை நடைமுறைப்படுத்தலும் வலுவூட்டலும்.

    ii. இத்தொழில்துறையில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சி வீதக்கினை பேணுவதற்காக பணியாற்றுதல்.

    iii. ஏனைய ஒழுங்குபடுத்தல் செயன்முறைகளில் நேரடி தலையீட்டினூடாக உயர்தரமான தொழில்துறையை உருவாக்குவதற்கு சர்வதேச மதிப்பீட்டிற்கும் தலையீட்டிற்கும் உட்பட முடியுமான முழுமையான தொழில்துறையிலும் ஒட்டுமொத்தமாக தரப்படுத்தப்பட்ட இச்செயன்முறையை உயர் மட்டத்தில் பேணுவதற்கு சுகாதார அமைச்சு கட்டுப்படுத்தப்பட்ட வழிமுறைகளை பின்பற்றியுள்ளது.

    iv. இத்தொழில்துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக 4 உப குழுக்களின் பங்களிப்பினூடாக செய்திறன்மிக்க சேவையை வழங்குதல்.

    v. சங்கத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அனைத்து உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவ அங்கீகாரம், தரப்படுத்தப்பட்ட அங்கீகாரம் மற்றும் வர்த்தக அனுசரணை என்பவற்றை வழங்குதல்

    vi. இத்தொழில்துறையின் தொழில்சார் பண்பினைப் பாதுகாப்பதற்கான நடத்தை விதிகள் / ஒழுக்கநெறி விதிகளை அறிமுகப்படுத்துதல்

    vii. இத்தொழில்துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், தற்போதைய தேவைகளை ஆதரித்து வாதிடுவதற்கும் அரசாங்க முகவர் நிறுவனங்கள் / அங்கத்துவ முகவர் நிறுவனங்கள், வணிக சங்கங்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் ஊடக முகாமைத்துவம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் தொடர்புகொள்ளல்.

    viii. சங்கத்தை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் முன்வைப்பதற்கு தேவையான சட்ட மற்றும் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்,

    ix. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் வணிக வாய்ப்புக்களை இனங்காணுதல் மற்றும் அவற்றைப் பின்தொடர்வதற்கு அங்கத்தவர்களை ஊக்குவித்தலும் வழிகாட்டுதலும்

    x. போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரின் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் தரமற்ற போலிகளை பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்து அவர்களுக்கு அறிவூட்டல், அத்துடன் எமது தொழில்துறையில் தொழில்முறைரீதியான மாற்றத்தினை ஊக்குவித்தல்.

    xi. சகல உறுப்பினர்களுக்கும் இலக்கிற்குரிய சந்தைகளை வெற்றிகொள்வதற்கு அவசியமான பெரியதும் சிறியதுமான பேரண்டப் பொருளாதாரக் காரணிகள் பற்றிய பொருளாதார வழிகாட்டல்களையும் பகுப்பாய்வுகளையும் வழங்குவதனூடாக இத்தொழில்துறையிலுள்ள புதிய எதிர்கால வாய்ப்புக்களை இனங்காணுதலும் முன்வைத்தலும்.

    xii. அனைத்து உறுப்பினர்களையும் ஒரு தனித்துவமான அங்கீகாரத்திற்கு உட்படுத்துவதன் மூலம் மூலப்பொருட்களை வாங்குவதற்கும் சரிபார்ப்பதற்கும் ஒரு செயல்முறையை அறிமுகப்படுத்துவதனூடாக தரமற்ற போலிகளிலிருந்து சந்தையைப் பாதுகாக்க தலையீடு செய்தல்.

    xiii. எமது சங்கத்தின் எதிர்காலம் மற்றும் அங்கத்துவத்தை சட்டரீதியாகவும் சமூகரீதியாகவும் வலுவூட்டுவதற்காக தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக் கணக்காய்வு ஊடாக பொதுவான செயன்முறையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

    xiv. சங்கத்தை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்காக நிதிச் சபையின் அங்கீகாரத்துடன் சமூக நிறுவனங்களின் நியமப்படுத்தப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

xv. தற்போதுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் எமது தொழில்துறையுடன் தொடர்புடைய தொழில்துறையைப் பாதிக்கும் ஏனைய காரணிகளை வருடாந்த வெளியீடொன்றினூடாக பகுப்பாய்வு செய்தல்.

(2). சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து மேற்குறித்த சங்கத்திற்கு விடுவிப்பளித்து அக் கட்டளைச் சட்டத்தின் பிரயோகத்தை வரையறுக்கிறேன்.

**வசந்த சமரசிங்ஹ,**
வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும்,
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.

வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு,
இல. 492, எல்.எச்.பி கட்டிடம்,
ஆர் ஏ டி மெல் மாவத்தை,
கொழும்பு 03,
2026 ஏப்பிறல் 20.

ECG 04- 0207/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.